# இந்திய அரசின் செம்மொழித் திட்டம்
# தமிழ் மொழி மேம்பாட்டு வாரியம்
### மூன்றாவது கூட்டம் (10,11 மார்ச்சு 2007)

### அண்ணா பல்கலைக்கழகம், சென்னை

**செய்திக் குறிப்பு**

மைசூரிலுள்ள இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்தை மையமாகக்கொண்டு இயங்கிவரும் செம்மொழித் திட்டத்தின் ஓர் அங்கமான தமிழ் மொழி மேம்பாட்டு வாரியத்தின் மூன்றாவது கூட்டம் சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் 2007 மார்ச்சு 10,11 ஆகிய இரு நாட்களிலும் நடைபெற்றது. வாரியத்தின் தலைவர் பேரா. வா.செ. குழந்தைசாமி அவர்களின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்தின் இயக்குநர் பேரா. உதய நாராயண சிங், மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் நிதித்துறை இயக்குநர் திரு. எஸ். மோகன், சாகித்ய அகடமியின் செயலர் பேரா.அ.கிருஷ்ணமூர்த்தி, தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் முனைவர் ம.இராசேந்திரன், வாரிய உறுப்பினர்கள், பேரா.மா.நன்னன், முனைவர் அவ்வை நடராசன், பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன், முனைவர் ஐராவதம் மகாதேவன், கவிக்கோ அப்துல் ரகுமான், கவிஞர் ஈரோடு தமிழன்பன், திட்டத்தில் பணிபுரியும் பேராசிரியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

திரு எஸ். மோகன் அவர்கள் தமது வரவேற்புரையில் திட்டத்தின் முன்னேற்றம் குறித்து பாராட்டினைத் தெரிவித்துக் கொண்டு திட்டத்திற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு தங்குதடையின்றி வழங்கப்படும் என்று உறுதியளித்தார். தலைமையுரை ஆற்றிய பேராசிரியர் வா. செ. குழந்தைசாமி அவர்கள் இந்தியப் பண்பாட்டு மரபிற்குத் தமிழும் திராவிட நாகரிகமும் அளித்துள்ள பங்கினை தக்கவாறு எல்லோரும் உணரும்படிச் செய்யவேண்டும் என்றும் தமிழின் வளர்ச்சிக்குப் பெருமளவு நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

பேராசிரியர் உதயநாராயணசிங் அவர்கள் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள பல்வேறு பணிகளின் முன்னேற்றம் குறித்து விரிவாக எடுத்துக் கூறினார். திட்டத்தின் பொறுப்பாளரும் கூட்டத்தின் அமைப்பாளருமான பேராசிரியர் க.இராமசாமி அவர்கள் நிகழ்ச்சி நிரலில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகள் தொடர்பாக வாரிய உறுப்பினர்கள் கருத்துரை வழங்கும்படி கேட்டுக்கொண்டார். செம்மொழித் திட்டத்தின் வாயிலாக

நிறைவேற்றப்பட்டுவரும் பல்வேறு பணிகள் குறித்தும் வருங்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்தும் இக்கூட்டத்தில் விரிவாகக் கலந்தாய்வு செய்யப்பட்டது.

கலந்தாய்வின்போது எடுக்கப்பட்ட குறிப்பிடத்தக்க முடிவுகளாவன:

1. கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட 41 பழந்தமிழ் நூல்களின் செம்பதிப்பும் அந்நூல்களின் ஆங்கில மொழி பெயர்ப்புகளும் இவ்வாண்டு இறுதிக்குள் வெளியீடு செய்யப்படும். நூல் வெளியீட்டுப் பணி ஏப்ரலிலேயே தொடங்கவுள்ளது.
2. பழந்தமிழ் இலக்கணம், இலக்கியம், கல்வெட்டுகள், நாணயங்கள் தொடர்பான 50 ஒளிக்காட்சிப் படங்கள் இவ்வாண்டிற்குள் வெளியீடு செய்யப்படும். இவற்றுள் 20 படங்கள் ஏப்ரலுக்குள் தயாராகிவிடும்.
3. இந்தியப் பண்பாட்டிற்குத் தமிழின் பங்களிப்பு, பக்தி இயக்கம் தமிழிலிருந்து தொடங்கி உலகமுழுவதும் பரவியமை, இந்திய இலக்கியங்களில் பழந்தமிழ் இலக்கியங்களின் தாக்கம், சிந்து சமவெளி எழுத்தும் நாகரிகமும் ஆகிய பொருள்களில் அனைத்துலக மாநாடுகள் பல்கலைக்கழகங்களோடு இணைந்து நடத்தப்பெறும்.
4. பண்டைய தமிழ்ப் பெண்பாற் புலவர்களைப் பிற செவ்வியல் மொழிகளின் பெண்பாற் புலவர்களோடு ஒப்பிட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.
5. இதுவரை அகராதிகளில் இடம் பெறாத வழக்காற்றுச் சொற்கள் ஆயிரக்கணக்கில் உள்ளன. அவை அடையாளங் காணப்பட்டு இணையத் தளத்தின் மூலமும் அச்சு வழியும் வெளியீடு செய்யப்படும். தமிழ்நாடு முழுவதும் பேச்சுவழக்குச் சொற்களைத் திரட்டக் கள ஆய்வு மேற்கொள்ளப்படவுள்ளது.
6. வரலாற்று முறைத் தமிழ் இலக்கணத்தின் (Historical Grammar) முதல் தொகுதி இவ்வாண்டிற்குள் வெளியிடப்படும்.
7. செம்மொழித்திட்டத்தின் செய்திமடல் மூன்றுமாதங்களுக்கு ஒருமுறை "செம்மொழி" என்ற பெயரில் வெளிவருகிறது. இணையத் தளமும் ( www.ciil-classicaltamil.org ) தொடங்கப்பட்டுத் தொடர்ச்சியாகப் புதிய செய்திகள் அவ்வப்போது சேர்க்கப்பட்டுவருகின்றன.

தமிழ் மொழி மேம்பாட்டு வாரியத்தின் தலைவர் பேராசிரியர் வா.செ. குழந்தைசாமி அவர்கள் இவ்வாறு தெரிவித்தார்.

# CENTRAL PLAN SCHEME FOR CLASSICAL TAMIL

## Tamil Language Promotion Board

### THIRD MEETING (10-11 March 2007)

### at Anna University, Chennai

### PRESS NOTE

The Third Meeting of Tamil Language Promotion Board took place at Anna University, Chennai on 10 & 11 March 2007, under the Chairmanship of Prof.V.C. Kulandaiswamy. It was attended by Prof. Udaya Narayana Singh, Director, CIIL, Mysore, Thiru S. Mohan, Director (Finance), M.H.R.D., Dr.A.Krishnamurthy, Secretary, Sahitya Academy, New Delhi, Dr.M.Rajendiran and the other nominated members of Tamil Language Promotion Board Dr.M.Nannan, Dr.Iravatam Mahadevan, Kavikko Abdul Rahman, Dr.Avvai Natarajan, Kavignar Erode Thamizhanban, Perunkavikko V.M.Sethuraman, and the academic and technical staff of CIIL, who are associated with the Central plan scheme for classical Tamil.

The meeting started at 11 am as scheduled and Thiru S.Mohan welcomed the distinguished participants observing that the MHRD was satisfied with the progress made by the Centre of Excellence for Classical Tamil and would be ready to fund the schemes being planned to promote the cause of Classical Tamil.

The Chairman of the Board, in his introductory speech, pleaded for proper recognition of the contribution of the Dravidian Civilization to the cultural heritage of India which owes its glory to both Sanskrit and Tamil and for provision of adequate financial assistance by the MHRD.

Prof. Udaya Narayana Singh outlined the progress made in each of the ten mega-projects undertaken by CECT making it clear that though what has been achieved so far is praiseworthy, there is a need to further expedite the implementation of some of the schemes which have been facing certain unavoidable obstacles.

Prof.K.Ramasamy, Deputy Director, CIIL and Convener, Tamil Language Promotion Board, also welcoming the august gathering, sought the advice of the Board on the various issues included in the agenda.

The following are some of the decisions taken during the deliberations spread over three long sessions:

1. The definitive editions of forty one ancient Tamil texts (Eṭṭuttokai, Pattupāṭṭu, Patiṉeṇkīḻkkaṇakku, Tolkāppiyam, Cilappatikāram, Maṇimēkalai, Muttoḷḷāyiram, Iṟaiyaṉār kaḷaviyal) and their translations into English, many of which are under scrutiny, will be released before the end of this year and the publication is to start in April 2007 itself.
2. Fifty visual episodes relating to ancient Tamil literature, grammar, stone inscriptions and coins, twenty of which will be ready by April, will be completed during the next six months.
3. International Conference - seminars on the following themes will be conducted in collaboration with some of the leading universities in the country:

   The contribution of the Bhakti Movement and Literature to the world culture

   The Contribution of Tamil to Indian Culture

   The Indus Valley Civilization and the Indus Script

   The Role of Tamil in the growth of Indian Literatures
4. Extensive and in-depth research will be undertaken on ancient women poets in Tamil comparing their work with that of their counterparts in the other classical languages of the world.
5. A massive dialect survey, for which about 40,000 dialect words have been already identified and computerized and a bilingual questionnaire including 1500 questions have been prepared, will soon be launched.
6. The first part of the historical grammar of Tamil assigned to six different scholars working on phonetics, phonology, noun morphology, verb morphology, particles and syntax, will be ready for the press in the near future.
7. The second issue of the quarterly newsletter called Chemmozhi will be released in April_07. The CECT website ( www.ciil-classicaltamil.org ) launched a few months ago will be constantly updated.

Prof. V.C. Kulandi Swamy, Chairman, Tamil Language Promotion Board, said this in a press release.